# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,995 — 1933 ம் ஹ ஆவணிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. — நாலாகாம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாட்சிமை தங்கிய தேசாதிபதியவர்கள் சிமன்ஸ் ரேட்டு மருதானை ரேட்டைச் சந்திக்கும் இடத்தை ஓர் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி கற்பனை செய்திருப்பதினுல் :

ஆரம்ப படத்து இலக்கம் A 113. மருதானை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | சிமன்ஸ் ரேட்டில் 4, 6, 8 ம் இலக்கப் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதிகள் | தற்போது கட்டப்படும் கற்கட்டடத்தின் பகுதியும், கற்சுவர்களின் பகுதிகளும், விருந்தையின் பகுதிகளும் | சிமன்ஸ் ரேட்டு சின்ன பள்ளிவாசல் காரிய கர்த்தர் | 0 0 3·49 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது காரியகாரர்மூலமாக 1933 ம் ஆண்டு ஆகஸ்டு மாசம் 28 ந் திகதி, திங்கட்கிழமை காலை 10 மணிக்கு, கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முபாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும், பதிவு கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய் தாம் சாதிகும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு ஆகஸ்டுமீ 2 ந் வ.

(ஒப்பம்) டபிள்யு. எல். மேர்வி,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

1876 ம் ஹ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிடாவ வாசமவுக்கு ஓர் பொது இடுகாடு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,233. குறிச்சி—கிடாவ, பலிஸ்பத்து கிழக்கு, பாத்தும்பற, கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெல்கஹஉல்லெபத்தன .. | டாழ்நிலம் .. | (1) டபிள்யு. எம். பி. புஞ்சிபண்டா, (2) டபிள்யு. எம். பி. ஹீன்பண்டா, (3) டபிள்யு. எம். பி. டிங்கிரியம்மா, (4) டபிள்யு. எம். பி. பளிங்கு மெனிக்கா, (5) டபிள்யு. எம். பி. முத்து மெனிக்கா, கிடாவ | 0 0 9 |
| 2 | ஷை .. | பத்தன .. | ஷை .. .. | 1 0 0·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ (செப்டெம்பர்) புரட்டாதி மாசம் 1 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டு தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடமைகளினது தன்மையையும் அவ்வுடமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1933 ம் ௵ (ஆகஸ்டு) ஆவணிமீ 2 ௳.

ஆர். என். பொண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## தோட்டச்சம்பளக் காரியசபை அறிக்கைப் பத்திரம்.

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

*அறிக்கைப்பத்திரம், தோட்டச் சம்பளக் காரியசபை, புத்தளமும் சிலாபமும்.*

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி புத்தளம் சிலாபம் அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச் சம்பளக் காரிய சபையார், இத்தேதியிலிருந்து ஒரு மாதம் முடிந்த பின்னர், தங்களின் நியாயாதிகார எல்லைகளுக்குள் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட நேர வேலைகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக் குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தாலறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும்சொல்லவேண்டுமென்று விரும்பினால் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரியசபைத் தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

ஜே. லயிட்,
புத்தளம் சிலாபத் தோட்டச் சம்பளக் காரியசபைத் தலைவர்.

புத்தளக் கச்சேரி,
1933 ம் ஒகஸ்றம்மீ 4 ௳ திகதி.

---

## நகர டிஸ்திறிக்சங்க அங்கத்தவரைத் தெரிவுசெய்தல்.

*"கொலன்னுவ நகர சங்க அங்கத்தவரின் தெரிவு 1 ம் பகுதி.*

1932 ம் ஆண்டு கார்த்திகை மாசம் 7 ௳ திகதி நடந்த கொலன்னுவ முதலாம் பகுதி அங்கத்தவர் தெரிவில் ஒருவரையும் நியமிக்கப்படாததின் (நொமினேற்) நிமித்தமாக 1920 ம் ஆண்டு 11 ம் இலக்கச் சட்டத்தின் 35 ம் பிரிவின்படி தேசாதிபதி அவர்களால் கொலன்னுவ முதலாம் பகுதிக்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்ட முகாந்திரம், டி. பி. ஏ. விஜேவர்த்தன தமக்கு அவ்வங்கத்தவர் பதமை வேண்டாமென்று விட்டமையால் வருகிற புரட்டாதி மாசம் 7 ௳ திகதி வியாழக்கிழமையன்று கொலன்னுவ நகரசங்க முதலாம் பகுதிக்கு ஓர் அங்கத்தவரைத் தேர்தல் செய்ய உத்தேசப்பட்டிருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவராகத் தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில் கொடுபடல் வேண்டும். அப்பெயர்கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அந்தப் பிரிவிற்கு அங்கத்தவரைத் தேர்தல் செய்ய யோக்கியதை உள்ளவர்களின டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய இருவராலாவது கையொப்பமிடப்பட்டு அப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1933 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 7 ௳ திகதியன்று காலை 9 மணிக்கு அல்லது முன்னதாகவே கொலன்னுவ நகர சங்கக் கந்தோரில் கொடுபடவேண்டும்.

இந்தப் பிரிவிற்கு அங்கத்தவராகத் தேரப்படுவதற்கு ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுபடுமாயிருந்தால் கீழே சொல்லிய திகதியிலும் இடத்திலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும். அவ்வாக்கு (வோட்) எடுத்தல் முற்பகல் 8 மணி தொடங்கிப் பிற்பகல் 2 மணிக்கு நிறுத்தப்படும்.

| வாக்கு (வோட்) கொடுக்குமிடம். | திகதி. |
|---|---|
| கொத்தருவ—கொத்தருவ அணைக்கு அருகிலுள்ள முடிக்குரிய நிலத்திலுள்ள கொட்டகை. | 1933 ம் வருஷம் புரட்டாதிமீ 20 ௳ திகதி. |

ஆர். எம். வூர்ஸ்லி,
மேல்மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஆண்டு ஆடிமீ 29 ௳ திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.